## சனாதிபதித் தேர்தல் - 2019.11.16

## அஞ்சல் மூல வாக்குகளை அடையாளமிடுவதற்கான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட தேர்தலுக்காக அஞ்சல் மூல வாக்காளர்களின் வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளை எதிர்வரும் 2019.10.31 ஆம் மற்றும் 2019.11.01 ஆம் திகதிகளில் தத்தமது கடமை நிலையங்களில் மேற்கொள்வதற்குரிய வசதிகளை செய்யுமாறு அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மூலமாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அஞ்சல் மூல வாக்குகளை அடையாளமிடும் நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவும், மேற்பார்வை செய்வதற்காகவும் அநேகமான அலுவலர்களை ஈடுபடுத்தப்பட வேண்டியிருப்பதால், அனைத்து பொலிஸ் நிலையங்களிலும், மாவட்ட செயலகங்களிலும் அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகள் எதிர்வரும் 2019.11.04 ஆம் மற்றும் 05 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளது. குறித்த தினங்களில் தவிர்க்க முடியாத காரணங்களின் நிமித்தம் தமது வாக்கினை அடையாளமிட முடியாமற் போன அஞ்சல் மூல வாக்காளர்களுக்கு எதிர்வரும் 2019.11.07 ஆந் திகதி மு.ப. 7.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை தமது அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்துக்குரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் மேற்கொள்வதற்கு உரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

02. தேர்தல் ஆணைக்குழுவில் கடமை புரியும் அலுவலர்களின் அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகள் 2019.11.07 ஆந் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது.

03. அஞ்சல் மூல வாக்குகள் அடையாளமிடும் சந்தர்ப்பத்தை கண்காணிப்பதற்காக ஒரு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகத்தில் ஒரு வேட்பாளருக்கு ஒரு முகவர் வீதம் மற்றும் கண்காணிப்பு நிலையங்கள் சார்பாக ஒரு கண்காணிப்பாளர் ஆகியோர் சமுகமளித்திருக்க முடியும். இந்நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகத்தில் கடமையாற்றும் எவரேனும் ஒரு வேட்பாளர் அல்லது கண்காணிப்புக் குழு சார்பாக அவ்வலுவலகத்தில் அஞ்சல் மூல வாக்களிப்பினைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது.

- குறித்த இடங்களில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு உதவியாக அவ்வலுவலக ஊழியர்கள் ஒரு சிலரும் சிற்றூழியர் ஒருவர் அல்லது இருவர் போன்ற சிறு குழுவினர் மாத்திரம் சமுகமளித்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- அத்துடன், குறித்த இடங்களின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் சிலரையும் ஈடுபடுத்தியிருப்பர்.

04. மேலே 03ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அஞ்சல் மூல வாக்காளர் ஆகியோர் மாத்திரமே அஞ்சல் மூல வாக்களிப்பு நிலையத்தினுள் உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.

05. அஞ்சல் மூல வாக்களிப்பு மற்றும் அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடும் செயற்பாடுகள், அதன் சுற்றாடல் என்பவற்றைப் புகைப்படம் எடுத்தல், வீடியோ செய்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

06. விசேடமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் சட்டங்களில் காணப்படும் குற்றங்களை எவரும் மேற்குறித்த இடங்களில் இழைத்தலாகாது.

1. வாக்களிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள வளவில் ஒரு வேட்பாளரின் வேட்பாண்மையை ஊக்குவிக்கும் நோக்குடன் துண்டுப் பிரசுரங்கள், அச்சடிக்கப்பட்ட படங்கள் சின்னங்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்தலும், விநியோகித்தலும் செய்தலாகாது.
2. குறித்த இடங்களில் வாக்கை இரந்து கேட்டல் அல்லது ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாமென வற்புறுத்துதல் என்பன குற்றங்களாகும்..
3. குறித்த இடங்களில் அல்லது அண்மித்த இடங்களில் தேர்தலுக்கு இடையூறான எந்தவித செயல்களிலும் ஈடுபடலாகாது.
4. அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டு அல்லது அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டொன்றை குறித்த இடத்திற்கு வெளியே எடுத்துச் செல்வதற்கு முயற்சித்தல் கடுங்குற்றமாகும்.
5. அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டு ஒன்றை ஏனையோருக்குக் காண்பித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
6. அடையாளமிடப்பட்ட அல்லது அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டொன்றைப் புகைப்படமெடுத்தல், வீடியோ எடுத்தல் மற்றும் அவ்வாறான படத்தை சமூக வலைத்தளங்களில் அல்லது ஊடகங்களில் காண்பித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாறான செயல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் விதிகளை மீறியதாகக் கருதி நடவடிக்கையெடுக்கப்படும்.
7. அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டினைக் காண்பிக்குமாறு வாக்காளரை வற்புறுத்துதலும், அவ்வாறு காண்பித்தலும் கடுங்குற்றமாகும்.

07. அஞ்சல் மூல வாக்களிக்கும் நிலையமொன்றில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர், தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் குறித்த நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான அலுவலர் ஆகியோர் மேற்படி வாக்களிப்பை அமைதியான முறையில் நடாத்துவதற்கான ஒத்துழைப்பை பொலிசாரிடமிருந்து எதிர்பார்ப்பார்களாயின் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொலிஸ் மாஅதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

08. அஞ்சல் மூல வாக்காளர் ஒருவர் வாக்களித்துள்ள முறையினை எவரும் கண்டுகொள்ளாதவாறு அனைத்து அஞ்சல் மூல வாக்களிப்பு நிலையங்களிலும் சுதந்திரமாகவும், இரகசியமாகவும் தனது வாக்கை அடையாளமிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஏதேனும் ஒரு நிலையத்தில் தடைகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் குறித்த நிலையத்தின் வாக்கெடுப்பு இரத்துச் செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
தேர்தல் ஆணைக்குழு சார்பாக.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய
2019.10.17